NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 4 April 2019

# ‘வயிற்றுப் புற்றுநோய்க்கான புதிய ரத்த பரிசோதனை சாத்தியமாகலாம்’

இவ்வாண்டு இறுதிக்குள் வயிற்றுப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க உதவும் புதிய ரத்த பரிசோதனை சாத்தியமாகலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சுகாதார அறிவியல் ஆணையத்தின் ஒப்புதல் கிடைக்குமானால், வயிற்றுப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க உலகில் முதன்முதலாக மேற்கொள்ளப்படும் ரத்த பரிசோதனை இதுவாக இருக்கும் என்று இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் உள்ளூர் நிபுணர் கருத்துக் கூறியுள்ளார்.

“வயிற்றுப் புற்றுநோய் ஓர் அமைதியான உயிர்க்கொல்லி நோய். ஏனெனில் இது பெரும்பாலும் முற்றிய நிலையிலேயே கண்டுபிடிக்கப்படுகிறது. இதனால், இதற்கு சிகிச்சை வழங்கி குணப்படுத்துவது சிரமமான ஒன்று.

“உடலில் அறுவை சிகிச்சை எதுவும் மேற்கொள்ளாமல் ரத்த பரிசோதனை மூலம் இந்த நோயைக் கண்பிடிக்க முடிந்தால் இதற்கான சிகிச்சையை நோயின் ஆரம்பகட்டத்திலேயே அளிக்க முடியும்.

“தற்போதைய நிலையில் வயிற்றுப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க நம்பகமான ரத்த பரிசோதனை முறை இல்லை,” என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் இயோ கே குவான் கருத்துக் கூறினார்.

இந்த ரத்த பரிசோதனை மூலம் மனித உடல்களில் உள்ள மரபணுக்களை ஒழுங்குபடுத்தும் ‘மைக்ரோ–ஆர்என்ஏ’ அளவை கணக்கிடலாம்.

இது ‘என்டோஸ்கோப்பி’ எனப்படும் நோயாளிகளின் வயிற்றுப் பகுதிக்குள் குழாய் மூலம் புகைப்படக் கருவி ஒன்றைச் செலுத்திப் புற்றுநோயைக் கண்டுபிடிப்பதை விட குறைந்த செலவிலானது என்று கூறப்படுகிறது.

அத்துடன் பரிசோதனை முடிவுகள் பரிசோதனை நடந்த அதே நாளில் தெரிவிக்கப்படும்.

சிங்கப்பூர் வயிற்றுப் புற்றுநோய் குழுமத்தின் கீழ் ஏற்று நடத்தப்படும் இந்தத் திட்டம் இணைப் பேராசிரியர் இயோவின் தலைமையில் நடக்கும் நான்கு திட்டங்களில் ஒன்று.

திட்டங்களுக்கான $82 மி. நிதியுதவியை தேசிய மருத்துவ ஆய்வு மன்றம் அளித்துள்ளது. 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இந்நிதித் தொகையே ஆக அதிகமானது என்று கூறப்பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.